தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 ஆகஸ்ட் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. வி. வெங்கடசுப்பா ரெட்டி, எச். சீதாராம ரெட்டி, டி. சஞ்சீவையா,, கே. உப்பி சாகெப், ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார், காஞ்சி மணிமொழியார், ஹைடராஸ், திருமதி மனோன்மணி அம்மாள் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காட்டூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. டி. வி. வெங்கடசுப்பா ரெட்டி அவர்கள் 14—4—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பெல்லாரி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1936-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டு வரையிலும், 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரையிலும் உறுப்பினராகவும், மேலும் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை நில வரி, தொழிலாளர் நலம், தொழிற் துறை அமைச்சராகவும் இருந்தவருமான திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் 21—4—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

கர்நூல் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1953-ஆம் ஆண்டுவரை உறுப்பினராகவும், மேலும் கூட்டுறவு, வீட்டுவசதித் துறை அமைச்சராகவும் இருந்தவருமான திரு. டி. சஞ்சீவையா அவர்கள் 7—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

திரூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. உப்பி சாகெப் அவர்கள் 11—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

சைதாப்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார் அவர்கள் 18—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தியாகராயநகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள் 7—6—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு, முஸ்லிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஹைடர்ஸ் அவர்கள் 5—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

உளுந்தூர்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திருமதி ஏ. மனோன்மணி அம்மாள் அவர்கள் 12—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரது இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம் நாட்டுடன் நட்புரிமையோடு இருந்து வரும் நமது அண்டை நாடான பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் 21—7—1972-ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.